# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **64**

| | | | |
|---|---|---|---|
| Name: | அமானுல்லா | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A9, A11, A12, A16 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of** 18.07.2023

**முதல் விசாரணை**:

நான் தென்காசியில் மவுண்ட் ரோட்டில் குடியிருக்கிறேன். தமிழ்நாடு முஸ்லீம் முன்னேறக்கழகத்தில் மருத்துவ அணி செயலாளராகவும், ஆட்டோ ஓட்டுநராகவும் இருக்கிறேன். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள் கட்சி சார்பில் ஒரு ஆம்புலன்சு வாங்கினோம். அந்த ஆம்புலன்ஸ் வழக்கமாக மவுண்ட் ரோடு ஆட்டோ ஸ்டாண்டில் தான் நிற்கும். நான் ஆம்புலன்சை ஓட்டவில்லை. 14.08.2007 அன்று நடந்த விபரங்கள் பற்றி என் மனைவி மூலம் தெரிந்துகொண்டேன். நான் அன்றைய தினம் பெங்களூரில் இருந்தேன். அதனால் அன்றைய தினம் நடந்த விபரங்கள் எதுவும் தெரியாது. இரண்டு தரப்பிலும் கொலை நடந்ததாக கேள்விப்பட்டேன். இரண்டு பிரிவினர்கள் இஸ்லாமியர் என்றும் இந்துக்கள் என்றும் தெரியவந்தது. ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>:-**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார்கள் என்னை விசாரித்தார்கள் என்றும் அவர்கள் விசாரித்தபோது 14.08.2007 ம் தேதி வழக்கம்போல் காலை 10.30 மணிக்கு தென்காசி கூலக்கடை பஜாரில் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும், இந்து முன்னணியை சேர்ந்த சக்திப்பாண்டியன் வகையறாக்களுக்கும் மோதல் ஏற்பட்டு சிலர் கொலை செய்யப்பட்டு விட்டதாகவும், சிலர் காயமடைந்து கிடப்பதாகவும் கேள்விப்பட்டு, நான் ஆம்புலன்சை எடுத்துக்கொண்டு கூலக்கடை பஜாருக்கு போனதாகவும் அங்கு மேல முத்தாரம்மன் கோவில் முன்பு எங்கள் கட்சியை சேர்ந்த அசன்கனி வெட்டுப்பட்டு இறந்துகிடந்தார்கள் என்றும் அதற்கு சற்று மேல்புறம் தென்காசி மலையான் தெரு சொர்ணத்தேவர் மகன் சேகரும், முத்து டீ ஸ்டால் கடைமுன்பு சேகரின் தம்பி சுரேசும் வெட்டுக்காயங்களுடன் இறந்துகிடந்தார்கள் என்றும் அங்கு படுகாயங்களுடன் கிடந்த எங்கள் கட்சியை சேர்ந்த பசீர், நாகூர்மீரான், அப்துல்லா, ராஜாமுகம்மது, செய்யது அலி, மீரான் மைதீன், அபுஅயூப்அன்சாரி, ஆகியோர்களை எனது ஆம்புலன்சில் ஏற்றி இரண்டு தடவைகளில் தென்காசி அரசு மருத்துவமனை கொண்டுபோய் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும் பசீர் மருத்துவமனைக்கு போகும் வழியில் இறந்துவிட்டதாகவும் நாகூர்மீரான், அப்துல்லா, ராஜாமுகம்மது, செய்யது அலி, மீரான் மைதீன், அபுஅயூப்அன்சாரி ஆகியோர் ஏற்கனவே, அங்கு சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டிருந்த மலையான் தெரு, சொர்ணத்தேவர் மகன் செந்தில் ஆகியோர்களுக்கும் முதலுதவி செய்து அவர்களை இரண்டு ஆம்புலன்சில் பாளையங்கோட்டை ஹைகிரவுண்ட் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும் காயம்பட்ட நவாஸை எனது ஆம்புலன்சில்

ஏற்றிக்கொண்டு நானும் பாளையங்கோட்டை ஹைகிரவுண்ட் ஆஸ்பத்திரி சென்றதாகவும் பாளையங்கோட்டை மருத்துவமனையில் செந்திலும், நாகூர்மீரானும் இறந்துவிட்டார்கள் என்றும் இது சம்பந்தமாக சேரன்மாதேவி காவல் துணை கண்காணிப்பாளர் தன்னை விசாரித்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும் சம்பவ தினத்தன்று நான் தான் ஆம்புலன்சை ஓட்டி சென்று தென்காசி அரசு மருததுவமனையிலும் , பாளையங்கோட்டை மருததுவமனையிலும் சிகிச்சைக்காக சேர்த்தேன் என்றும் 14.08.2007 ம் தேதி நடந்த சம்பவத்தில் எங்கள் கட்சியை சேர்ந்தவர்களும் தொடர்புடையவர்கள் என்பதால் அன்றைய தினம் நான் ஊரிலேயே இல்லை என்று பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை காப்பாற்றும் பொருட்டு உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**